

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் மனைவி திருமதி சவுதா மற்றும் குடும்பத்தினர் சந்தித்து, அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் பிறந்த நாளான ஜீன் 15–ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அனைத்து மத்ரஸாக்களின் கூட்டமைப்பின் தலைவர் மௌலவி எம்.அப்துல் ஹமீது பாகவி, செயலாளர் மௌலவி பி.எம். முஹம்மது அலி அன்வாரி, பொருளாளர் மௌலவி பி.ஷகீல் அஹமது ரஷாதி, நிர்வாகிகள் மௌலவி முனைவர் எம்.சதீதுத்தீன் பாக்கவி, மௌலவி ரூஹுல் ஹக் ஹஜ்ரத் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர், திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஆர்.முகமது இலியாஸ் ஆகியோர் உள்ளனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் காங்கயம் சட்டமன்ற தொகுதி, வெள்ளகோவில் ஒன்றிய, நகர கழக அலுவலகத்தில் இல்லம் தோறும் மாணவர் அணி புதிய உறுப்பினர் சேர்க்கையை கழக மகளிர் அணி துணை செயலாளர் – அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், இல.பத்மநாபன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குகன் முன்னிலையில் திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய செயலாளர் கே.சந்திரசேகரன், நகர செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகனசெல்வம், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் க.செல்வராஜ், மூலனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் துரை.தமிழரசு, மூலனூர் பேரூர் செயலாளர், பேரூராட்சி தலைவர் க.தண்டபாணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் யுவராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருவெறும்பூர் மலைக்கோவில் பேருந்து நிலையத்தின் எதிர்புறம் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது . இந்த சிறப்பு பட்டிமன்றத்தில் சிறப்பு அழைப்பாளராக நாடாளு மன்ற உறுப்பினரும் கழக கொள்கை பரப்பு செயலாளருமான ஜெகத்ரட்சகன் மற்றும் பட்டிமன்ற நடுவராக நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர் . மு.மதிவாணன் வரவேற்றார் . சிவக்குமார் நன்றி கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் ஆத்தூரில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மலர்கொடி ஆகியோர் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கருணாநிதி, சுரேஷ்குமார், சின்னதுரை , மலையரசன் எம்.பி., பாலசுப்பிரமணியம், வேல்முருகன், டாக்டர் செழியன், தங்க மருதமுத்து, சிவராமன், மூர்த்தி, ஏ.ஏ.ஆறுமுகம், சிவராமன், சந்திரமோகன், சோமசுந்தரம், மனோகரன், முத்துலிங்கம், பாபு, வெங்கடேஷ், காங்கமுத்து, மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் கோபி நன்றியுரையாற்றினார்.



மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் நகரக் கழக செயலாளர் குண்டாமணி ( எ)செல்வராஜ் ஏற்பாட்டில் அண்ணா பகுத்தறிவு மன்ற வளாகத்தில் அமைக்கப்பட்ட கோடைகால நீர் மோர் பந்தலை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.ராஜா, பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ. வின்சென்ட், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் செல்வராஜ், நாகப்பன் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் மகள் வஹிதா, மருமகன் அயாஸ் பாஷா ஆகியோர் சந்தித்து, கவிக்கோ அப்துல் ரகுமான் பிறந்த நாளான நவம்பர் 9–ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை வருகின்ற மே மாதம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்க உள்ளதை முன்னிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 18.04.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் அருள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டிடங்கள்) திருமதி.பி.அன்பரசி, நகரப் பொறியாளர் சிவபாதம், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவநாளில் புதுக்கோட்டையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் முன்னிலையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். பின்னர் அனைவரும் சமத்துவநாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, பி.ராஜேஸ்வரி, எம். லியாகத்அலி, சு.சண்முகம், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், வே.ராஜேஸ் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, வட்ட, கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநிலச் செயலாளர் ராஜீவ் காந்தி தலைமையில் நடைபெற்ற தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு, தஞ்சை மாநகர், திண்டுக்கல் கிழக்கு, மேற்கு, திருச்சி வடக்கு , மத்திய, தெற்கு, திருச்சி கிழக்கு மாநகர், புதுக்கோட்டை வடக்கு, தெற்கு, திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர் மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆலோசனைகளை வழங்கினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் மேயர் சண். இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், தமிழ் கா.அமுதரசன், திருச்சி ஆனந்த், ஈரோடு வீரமணி, தஞ்சை மத்திய மாவட்ட துணைச் செயலாளர் கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கும்பகோணம் பேருந்து நிலையத்தில், கும்பகோணம் கோட்ட போக்குவரத்துக் கழகத்தில், பணியின் போது இறந்த 35 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கி, 5 புதிய நகர பேருந்துகளையும், 7 புதிய புறநகர பேருந்துகளையும் அமைச்சர் சா.வி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மற்றும் கும்பகோணம் கோட்ட போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர், துறை சார்ந்த அலுவலர்கள், அரசு அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.